பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

**Kalaikkathir**

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 08 செவ்வாய்க்கிழமை 23.05.2023 கதிர் 194

## இது ரகசியம் அல்ல!

புதிய ஆளுநர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுவிட்டார்கள். அதையொட்டில் வடக்கு கிழக்கில்தான் பரபரப்புக்கள். கிழக்கில் கடமையேற்பு பெரும் கொண்டாட்டம். பெரும் எண்ணிக்கையில் பலரும் திரண்டு வந்து புதிய ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள். அன்று அவருக்கு விழுந்த பொன்னாடைகள் மட்டும் நூறுக்கும் மேல் இருக்கும் என்றார் பத்திரிகையாளர் ஒருவர்.

வடக்கில் நிலைமை மாறியிருந்தது. கடமையேற்பின்போதும் ஏதாவது ஆர்ப்பாட்டம் நடக்குமோ என்ற ஒருவித அச்சம் நிலவியதால் வெறும் சம்பிரதாயபூர்வ நிகழ்வுகளுடன் காட்சிகள் முடிவுக்கு வந்தன. ஆளுநர் கடமையைப் பொறுப்பேற்கும் போது ஆளுநர் ☞2

### கொழும்பு அரசு மாகாணங்களிடமிருந்து

# பறித்தெடுத்த அதிகாரங்களை திரும்பப்பெற முயற்சி எடுங்கள்

### பதவியேற்ற ஆளுநரிடம் சி.வி.கே.சிவஞானம் வலியுறுத்து

கொழும்பு, மே 23

மாகாண சபைகளிடமிருந்து கொழும்பு பிடுங்கிய அதிகாரங்கை மீளப்பெற முயற்சிக்கவேண்டும் என்றுஇரண்டாவதுதடவையாகவும் பதவியேற்றுக்கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸிடம் வலியுறுத்தினார் வடக்கு மாகாண அவைதத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

ஆளுநர் திங்கட்கிழமை தனது யாழ்ப்பாண அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றார். இந்த நிகழ்வில் வடமாகாண அவைத்தலைவரும் கலந்துகொண்டார். அங்கு உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் இலக்கு, அபிலாசை என்ன என்பதை நாங்கள் சொல்லித்தான் உங்களுக்கு தெரியவேண்டும் என்பதில்லை. நீங்கள் எங்களில் ஒருவர். ☞2



## உயிலங்குளத்திலும் விகாரை அமைக்கின்றது இராணுவம்



மன்னார், உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் 542ஆவது படைப் பிரிவினால் புதிதாக வீதியோரம் விகாரை அமைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கணிடித்தார்.

மன்னார், உயிலங்குளம் பிரதேசத்தில் புதிதாக இராணுவத்தினரால் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை தொடர்ந்து நேரில் சென்று பார்வையிட்டார் ☞2

## கனடாப் பிரதமரின் கருத்தைக் கண்டித்து கொழும்பில் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்



இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற கனேடியப் பிரதமரின் கருத்தைத் திரும்பப்பெற வேண்டும்என்றுகொழும்பில் அந்த நாட்டுத் தூதரகம் முன்பாகப் போராட்டம் நடத்தப்பட்டது.

இவ்விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏன் அமைதியாக இருக்கின்றார் என்றும் போராட்டம் நடத்திய காலி முகத்திடல் மக்கள் அமைப்பு கேள்வியெழுப்பியுள்ளது.

"எங்கள் தமிழ் மக்களை நாங்கள் பாதுகாத்தோம்'', ''இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெறவில்லை'', ''விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள்'' என்று ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியபடி பலர் தூதரகம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து ☞2

## தையிட்டியில் மீண்டும் போராட்டம்

தையிட்டி விகாரையை எதிர்த்து நேற்று மீண்டும் போராட்டம் நடத்தப்பட்டதாகவும் இன்று தொடர்ந்து போராட்டம் இடம்பெறும் என்றும் தமிழ்த் தேசியப் பேரவை என்ற அமைப்பு அறிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

''தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்றக் கோரியும், இராணுவத்தினதும், சட்டவிரோத திஸ்ஸ விகாரையினதும் ஆக்கிரமிப்பிலுள்ள தனியார் காணிகளை விடுவிக்கக் கோரியும் போராட்டம்தையிட்டிக்குஅனைவரும் அணிதிரளுமாறு அழைக்கின்றோம்'' என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தையிட்டியில் தனியார் காணிகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து சட்டவிரோதமாகஅமைக்கப்பட்டுள்ளதிஸ்ஸ விகாரைக் கட்டுமானத்திற்கு எதிராகவும், தனியாருடைய காணிகளைஉரியவர்களிடம் ஒப்படைக்கவேண்டும்என்று வலியுறுத்தியும்திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

கவனயீர்ப்புப்போராட்டம் இடம்பெற்றதாகவும் அந்த அமைப்புத் தனது ☞2

## ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் விரைவில் பெருங்கூட்டணி அமையும்

### பொது அமைப்புகளையும் உள்ளடக்கி என்கிறார் காவிந்த எம்.பி.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் பெரும் அரசியல் கூட்டணி ஒன்று விரைவில்உருவாகும்என்று நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

அரசியல் கட்சிகளை மாத்திரமின்றி பொது அமைப்புக்கள், புத்திஜீவிகள் உள்ளிட்டபலதரப்புகளையும்ஒன்றிணைத்துஇந்தப்புதியகூட்டு உருவாக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்கள்தேவைக்கேற்பச் செயற்படாமையின் காரணமாகவா பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலை வரை பதவி நீக்க முயற்சிக் கிறது? மக்கள் ஆணையற்ற இந்த ஆட்சிக்கு எதிராக மக்களுக்குச் சேவை வழங்கும் அவரைப் பதவி நீக்குவதற்கான அதிகாரம் கிடையாது.

110 சத ☞2

## போதைப் பொருள் பாவித்த குற்றச்சாட்டில் பல்கலைக மாணவன் உட்பட 17 பேர் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள்பயன்படுத்தினார்கள் மற்றும் விற்றார்கள் என்ற சந்தேகத்தில் பல்கலைக்கழக மாணவன் உள்ளிட்ட 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரையும் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவர்களை சட்டமருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி திங்கட்கிழமை அனைவரும் போதனா வைத்தியசாலையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

யாழ்ப்பாணம்பல்கலைக்கழக மாணவன் உள்ளிட்ட 15 பேர் போதைப் பொருள் பயன்படுத்தியமை மருத்துவப்பரிசோதனைகளில்உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏனைய இருவரும்போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டதற்கான சான்றுகள் காணப்படவில்லை என மருத்துவச் சான்றுதழ் வழங்கப்பட்டுள்ளது.

## மூவர் சுட்டுப் படுகொலை!

### தென்னிலங்கையில் பயங்கரம்

தென்னிலங்கையில் வெவ்வேறு இடங்களில் மூவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை பொலிஸ் பிரிவில் நேற்றுப் பிற்பகல்ஓட்டோசாரதிஒருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

ஓட்டோவைச் செலுத்திச் சென்ற குறித்த நபர் மீது மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போதுஓட்டோசாரதியான 27 வயது இளைஞர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தார்.

காலி பொலிஸ் பிரிவில் நேற்றுக் காலை வயோதிபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தேங்காய் வியாபாரியான குறித்த நபர், வீதியோரத்தில் தேங்காய்களை விற்றுக்கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், அவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது68வயதான தேங்காய் வியாபாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவர் ஏழு பிள்ளைகளின் தந்தையாவார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹக்மனகொடிதுவக்குகே சாகர என்ற 35 வயதுடைய நபரே துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தார்.

அவர் தனது மனைவி மற்றும் பிள்ளையுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போதே சுட்டுக் கொல்லப்பட்டார். (02)

## வீடியோ மோகம் 3 பேரின் உயிரைப் பறித்தெடுத்தது

(ந.லோகதயாளன்)




தமிழ்நாட்டில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் இளைஞர்கள் மூவர் ஒரே மோட்டார் சைக்கிளில் வீதியில் வீடியோ எடுத்துகொண்டே சென்று விபத்தில் சிக்கியதில் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

தமிழ்நாடு, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அருகே பெத்திக்குப்பம் பகுதியில் சென்னை - கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தயாளன் (19 வயது) , சார்லஸ் (21 வயது) மற்றும் ஜான் (20 வயது) ஆகியோரே உயிரிழந்தனர்.

இவர்கள் மூவரும் தாங்கள் மோட்டார் சைக்கிளில் பயணிப்பதை வீடியோ எடுத்தபடியே பார ஊர்தி ஒன்றை முந்திச் செல்ல முயன்றுள்ளனர். அப்பொழுது அந்த பார ஊர்தியில் மோதி கீழே விழுந்ததில் சம்பவ இடத்திலேயே மூவரும் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் விபத்து ஏற்படுத்திய பார ஊர்தி ஓட்டுநரை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிர் காக்கவென நாட்டைவிட்டுவெளியேறிகாணொளி மோகத்தால் இளைஞர்கள் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## 2 கிராம் ஹெரோயின் வைத்திருந்தவருக்கு ஆயுள் தண்டனை

2 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு கொழும்பு நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

2014 ஆண்டு 02.39 கிராம்ஹெரோயின்போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட ரவி நமட்ட என்று அழைக்கப்படும் நடராஜா ரவீந்திரன் என்பவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு வெல்லம்பிட்டியபிரதேசத்தில்கைது செய்யப்பட்டிருந்த நிலையில் பிரதிவாதிக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

சந்தேகத்திற்குஇடமின்றி குற்றம் குற்றச்சாட்டை அரசுத் தரப்பு நிரூபித்துள்ளதாகவும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஆயுள் தண்டனை விதித்தும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

## ஜனாதிபதித் தேர்தலுக்குப் பணம் உண்டு; உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பணம் இல்லை

### இது நகைச்சுவை என்கின்றது சஜித் அணி



ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குப் பணம் உண்டு. உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை. இதுவொரு நகைச்சுவை - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமை சர்வதேச மட்டத்தில் கடன் பெறுவதில் சிக்கலை ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாளிகையை முற்றுகையிடுவோம்என்றுஒரு6பேர்விடுத்த எச்சரிக்கையைஅடுத்து, போராட்டங்களுக்குத் தடைபெற பொலிஸார் முயற்சித்தனர்.

நீதிமன்றை நாடிய அவர்களுக்கு, வீதியை மறிக்காமல், அலுவலக வாயிலை மறிக்காமல்,போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தாமல் போராடலாம் என்று அனுமதி வழங்கியது நீதிமன்றம். இத்தனை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும் எதிர்ப்புக் காட்ட அங்கு ஒரு ஈ காக்காகூட வரவில்லை. முன்னதாக வெள்ளிக்கிழமை ஆளுநர் கடமையைப் பொறுப்பேற்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு இருந்த காரணத்தால், 6 பேர் ஆளுநர் அலுவலகம் முன்பாக வீதியோரம்பதாகைகளைப்பிடித்தபடி போராட்டம் செய்தனர்.

வடக்கு ஆளுநர் அரச பணியாளராக இருந்த சமயத்தில் அவர் மீது சுமத்தப்பட்ட ஊழல்குற்றச்சாட்டுக்களைத் தூக்கிப் பிடித்தபடி அவர்கள் நின்றிருந்தனர். அந்த ஆர்ப்பாட்டம் முன்னாள் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் அடிப்பொடிகளால் ஏற்பாடு செய்யப்பட்டது என்கிறது பொலிஸ். அதை ஏற்பாடு செய்ததில் முக்கியமானவர் ஓர் ஊடகவியலாளர் என்றும் அவர் ஆளுநரின் விசுவாசி என்றும்பொலிஸார் நீதிமன்றத்தில் முன்வைத்த அறிக்கையிலும் தெரிவித்திருந்தனர்.

போராட்டம் நடந்த வெள்ளிக்கிழமை 7 ஆவது ஆளாக போராட்டக்காரர்களைப்படம் எடுப்பதிலும் செய்தி சேகரிப்பதிலும் முன்னணியில் இருந்தார் அந்தச் ஊடகவியலாளர். ஆனால், அவர்தான் போராட்டத்தின் சூத்திரதாரியே என்கிறது பொலிஸ். திங்கட்கிழமை போராட்டக்கூடும் என்று எதிர்பார்த்து நீதிமன்றத் தடை உத்தரவு பெறப்பட்டவர்களின் பட்டியில் அவரது பெயரையும் சேர்த்துக்கொண்டது பொலிஸ். விளைவு, வடக்கு ஆளுநர் பதவியேற்றால் ஆளுநர் அலுவலகத்தையே முற்றுகையிடுவோம் என்று எச்சரிக்கைவிட்ட ஒருவரையும் அந்தப் பக்கம்கூடக் காணோம்.

இத்தகைய அட்டைக்கத்திகளை நம்பித்தான் இவ்வளவு காலமும் நிர்வாகத்தை ஓட்டியிருக்கிறார் ஜீவன் தியாகராஜா என்பதை நினைக்கவே வேடிக்கையாக இருக்கின்றது. வடக்கில் ஆரம்பமே இப்படி என்றால், கிழக்கில் ஆரம்பம் மிகச் சிறப்பாக அமைந்தாலும் போகப் போக முணுமுணுப்புக்கள் தொடங்கிவிட்டன.

கிழக்கு ஆளுநர் இளவல். கவர்ச்சிகரமானவரும்கூட. இள ரத்தத் துடிப்புடன் வந்த உடனேயே மாகாணத்தின் நிர்வாக அலுவலகங்கள் எல்லாவற்றுக்கும் நேரில் ஒரு 'விசிட்' அடிக்கிறார். ஆள் கடமையே கண்ணாக இருக்கிறார் என்று பார்த்தால், ஒருமுறைசுற்றிப்பார்த்துவிட்டு அங்கே உள்ளவற்றிலேயே எதெல்லாம்'பெஸ்ட்'டாக இருக்கின்றதோ அதையெல்லாம் தன்னுடைய பாவனைக்குக் கொண்டு செல்லுமாறு உத்தரவிடுகின்றாராம் என்று முணுமுணுப்புத் தொடங்கியிருக்கிறது.

இருப்பதிலேயேசிறப்பான அலுவலகத்தைத் தனது பாவனைக்குக் கேட்டிருக்கிறார். ஓர் அலுவலகத்திற்குச் சென்றபோது, அங்கிருந்த 'செற்றி'கள் நன்றாகவும் அழகாகவும் இருந்ததால் அவற்றையும் தனது அலுவலகத்திற்கு மாற்றப் பணித்திருக்கிறாராம். இப்படி இனி என்னென்னவெல்லாம் அவரது பாவனைக்கு என்று சிறப்பாகப் போகுமோ என்று பின்னால் கதைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இருந்தாலும் தனது காலத்தில் கிழக்கில் ஒரு மாற்றத்தை உருவாக்காமல் போகமாட்டேன்என்றும்அவர் கங்கணம்கட்டிக்கொண்டிருக்கிறாராம் என்றும் கேள்வி. பார்க்கலாம் எது நடக்கின்றது என்று.

- இடிமின்னல் -

## பறித்தெடுத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின்படி மாகாண அதிகாரத்தில் நீங்கள் தெளிவாகவும் இறுக்கமாக இருப்பீர்கள் என நாங்கள் நம்புகின்றோம். ஏற்கனவே மாகாணத்தில் இருந்து கொழும்பு ஆட்சியாளர்களால் பல விடயங்கள் பிடுங்கப்பட்டுள்ளனஅவற்றை எவ்வாறு மீளப் பெற நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதை எப்படிச் செய்வது என்று நான் கொல்லித்தான் நீங்கள் அறியவேண்டும் என்பதில்லை.

சில ஆளுநர்கள் நிர்வாக திறன் அற்றவர்களாகவும் மாகாண முறை தெரியாதவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் ஆனால் உங்களுக்கு மாகாண அனுபவம் உண்டு ஆகவே மாகாணத்தில் இருந்தது பறிக்கப்பட்ட விடயங்கள் அல்லது பிடுங்கப்பட்ட விடயங்களை திருப்பி பெறுவதிலே உங்களுடைய முயற்சி தீவரமாக இருக்க வேண்டும்.

மாகாணத்திற்குரியதாக இருக்கும் அதிகாரங்கைள கொழும்புதிரும்பப்பெறுவதை நாங்கள் தடுக்கவேண்டும். அதிகாரங்கைளத் திரும்பப் பெறுவது தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றது மாகாணத்திற்குட்பட்ட விடயங்கள் இதுவரையில் எடுக்கப்படுள்ளன.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண்மணி நீங்கள் எனவே இங்குள்ள அதிகாரிகளும் உங்களுக்கு ஒத்துழைப்பார்கள்.

எனவே வடக்கு மாகாண மக்களுக்கு உங்களால் முடிந்தளவு உதவுங்கள்

அதேபோலயாழ்ப்பாணத்திற்கான குடிதண்ணிர்த் திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஜனாதிபதியுடன் பேசி உரிய நடவடிக்கை எடுங்கள் குறிப்பாக இரணைமடுவில் இருந்து குடி தண்ணீர் கொண்டுவருவதாக இருந்தது ஆனால்தற்பொழுது அது சாத்தியமற்ற விடயமாகிவிட்டது

யாழ்ப்பாண மக்களுக்கு தேவையானகுடிதண்ணீரைக் கொண்டுவரக்கூடிய நடவடிக்கைகளை நீங்கள் உடன் செயற்படுத்துங்கள் அதற்கு நாங்கள் எங்களாலான முழு ஒத்துழைப்பை வழங்குவோம் - என்றார். (03)

## உயிலங்குளத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்.

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவவித்ததாவது:

இனங்கள் மத்தியில் நல்லிணக்கம்ஏற்படாமைக்கு இவ்வாறான செயற்பாடுகளே காரணங்களாக உள்ளன.

மன்னாரில் ஏற்கனவே 5 பௌத்த விகாரைகள் உள்ளன. மடு, முருங்கன், திருக்கேதீஸ்வரம், சௌத்பார், தலைமன்னார் ஆகிய இடங்களில் அவை உள்ளன. ஆனால், இங்கே பௌத்த குடும்பங்கள் ஐம்பது கூட இல்லை.

பௌத்த மக்கள் இல்லாத பிரதேசத்தில் இராணுவம் புதிதாக பௌத்த ஆலயங்களை அமைக்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகிறது.

இவ்விடயம் குறித்து உடனடியாக நான் புத்தசாசன அமைச்சரது கவனத்துக்கும், மாவட்டதிணைக்கள அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்துவேன் - என்றார் அவர்.

## கனடாப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வெளியிட் காலி முகத்திடல் மக்கள்அமைப்பின்உறுப்பினர் பலங்கொட கஸ்வத்த தேரர் அங்கு தெரிவித்ததாவது:

இலங்கையில் முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து தமிழ் இனப்படுகொலை செய்துள்ளனர் என கனேடிய பிரதமர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான கருத்துக்கு அயலுறவுத்துறை அமைச்சர் பதிலளிக்கவேண்டியதில்லை. மாறாக ஜனாதிபதியும், பிரதமரும் நேரடியாக அரசின் நிலைப்பாட்டை அறிவித்திருக்கவேண்டும்.

கனேடிய பிரதமரின் ஆதரமற்ற கருத்துக்களை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். எமது எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

இலங்கையில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றச்சாட்டுக்கள்தொடர்பில்கனடாஅறியாத பல தகவல்கள் அடங்கிய கடிதத்தை நாம் தூதரகத்தில் கையளித்துள்ளோம்.

தளதா மாளிகை மீதான தாக்குதல்கள் , ஸ்ரீமகா போதி தாக்குதல்உள்ளிட்ட தாக்குதல்களால் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் தமது குடும்பத்தினரைப் பாதுகாத்துக்கொள்வதற்காககுடும்ப அங்கத்தவர்கள் வெவ்வேறு பேரூந்துகளில் பயணிக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்களின் காரணமாக எமக்கும் பதில் தாக்குதல்களைநடத்தவேண்டியேற்பட்டது. இறுதியில் அனைத்து இன மக்களும் அழிவை எதிர்கொண்டனர். இவற்றை ஜனாதிபதியும், பிரதமரும் கனடாவுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இவ்விடயத்தில் ஜனாதிபதி ஏன் அமைதி காக்கின்றார்?

சிங்களபௌத்தமக்களை இனவாதிகளெனக்குறிப்பிட்டு, எமக்குகருத்துக்களைவெளிப்படுத்துவதற்கானசுதந்திரத்தை மறுக்கின்றனர்.

ஜனாதிபதியும், பிரதமரும் இது குறித்து தமது நிலைப்பாட்டை அறிவிக்காவிட்டால் நாம் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று உரியநடவடிக்கைகளைஎடுப்போம். எனவே கனேடிய பிரதமர் வெளியிட்ட கருத்துக்களை உடனடியாக மீளப்பெற வேண்டும் - என்றார்.

## தையிட்டியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இப்போராட்டத்தை தடை செய்வதற்காகப் பொய்களைக் கூறி நீதிமன்ற உத்தரவைப் பெற பொலிஸ் முயன்றது என்றும் எனினும் மல்லாகம் நீதிவான் மன்று விகாரையில் வழிபாட்டிற்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாதென்றும், விகாரைக்குச் செல்லும் வீதியில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாதென்றும் , வழிபாட்டிற்கு வரும் மக்களுக்கோ, விகாரையில் இடம்பெறும் உச்சவத்திற்கோ இடையூறு ஏற்படுத்தக்கூடாதென்றும் மட்டுமே கட்டளை பிறப்பித் துள்ளது என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

"இதையடுத்து மாலை 7.00 மணிவரை தையிட்டி விகாரைக்கு அண்மையில் இடம்பெற்றது. நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்ட வகையில் அமைதியான முறையில் போராட்டம் நாளை காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளது" என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தையிட்டிசனசமூகநிலையத்திற்கு அருகாமையில் ஒன்று கூடி போராட்டத்திற்கு வலுச் சேர்க்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## ஐக்கிய மக்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வீதத்தினால் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டபோதிலும், 3 சதவீதத்தினாலேயே கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுயாதீனஆணைக்குழுக்களை அரசியல் மயமாக்க முயற்சிக்க வேண்டாம் என அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றோம்.

இன்று நாடளாவிய ரீதியில் டெங்கு தீவிரமாகப் பரவி வருகின்றது. ஆனால் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு இன்று உள்ளூராட்சிமன்றங்கள் இல்லை. இதனால்மக்களுக்குகிடைக்க வேண்டிய எந்த சேவைகளும் கிடைக்காமலுள்ளது.

அரசாங்கம் அதன் தேவைக்காக தேர்தலைக் காலம் தாழ்த்தியுள்ளமைக்காக பிரதிபலனை மக்களே எதிர்கொள்கின்றனர்.

கடந்தஆண்டுசுமார்700 வைத்தியர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் சுமார் 2000 வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சத்திரசிக்சைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

எம்பிலிபிட்டி வைத்தியசாலையில் மகப்பேற்று பிரிவிலுள்ள இயந்திரங்கள் பழுதடைந்துள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக மருந்து தட்டுப்பாடுகள் நிலவுகின்றன. இந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படாவிட்டால் விரைவில்சுகாதாரகட்டமைப்பு பாரிய வீழ்ச்சியடையும் என எச்சரிக்கின்றோம்.

வெகு விரைவில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில், பாரிய அரசியல் கூட்டணியாக ஐக்கிய மக்கள் கூட்டணி அமைக்கப்படும். இது தொடர் பில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பங்காளிக்கட்சிகளுடனும் , அரசாங்கத்திலிருந்து விலகி தனித்து செயற்படுகின்ற ஏனைய கட்சிகளுடனும் பிரத்தியேக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கூட்டணி அரசியல் கட்சிகள் மாத்திரமின்றி சிவில் சமூக அமைப்புக்கள், புத்திஜீவிகள் உள்ளிட்ட பல தரப்பினரையும் கொண்டதாகவே காணப்படும். அதன் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாச களமிறக்கப்படுவார் - என்றார்.

## ஜனாதிபதித் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஏற்படுத்தும். சர்வதேசநாணய நிதியம் உள்ளிட்ட ஏனைய நிதி நிறுவனங்கள், நாடுகள் இந்த விடயத்தை உன்னிப்பாக அவதானிக்கும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குப்பணம்உண்டு. உள்ளூராட்சிசபைத்தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை. இதுவொருநகைச்சுவை. இதைச் சர்வதேச நாடுகள் உன்னிப்பாக அவதானிக்கும்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைக் கொண்டுவர வேண்டாம் என்று உலக நாடுகள் கூறுகின்றன. அது அந்தளவு ஆபத்தானது. ஜனநாயகத்துக்கு விரோதமானது.

ரணில் விக்கிரமசிங்க தேசியப்பட்டியல் ஊடாக எம்.பியாகுவதற்கு முன்பிருந்தே சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுமாறு இந்த அரசிடம் கூறிவந்தோம். அப்போது சென்றிருந்தால் நிபந்தனை கடுமையாக இருந்திருக்காது.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்த பின் செல்வதால்தான் நிபந்தனை கடுமையாக உள்ளது. அதை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாது. நாம் ரணில் செய்கின்ற எல்லாவற்றையும் எதிர்க்கும் எதிர்க்கட்சி கிடையாது - என்றார்.













காலைக்கதிர் Kalaikkathir

# ஆற்றில் நீராடச் சென்ற மாணவி முந்தலில் சாவு

முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலிச்சகுளம் ஆற்றில் நீராடச் சென்றவர்களில் பாடசாலை மாணவி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்த மாணவி உள்ளிட்ட குழுவினர் நீராடச் சென்றுள்ளனர், இதன்போதே உடப்புவையை சேர்ந்த 17 வயதுடைய மாணவி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(05)

# வட்டுக்கோட்டை வயலுக்குள் பாய்ந்தது இ.போ.சபை பஸ்!

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைபகுதியில் உள்ள வயலுக்குள் பாய்ந்த இலங்கை போக்குவரத்து சபை பஸ் ஜேசிபி இயந்திரத்தின் உதவியுடன் பொதுமக்களால் மீட்கப்பட்டது.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் ஞாயிற்றுக்கிழமை, பயணித்த பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வயல்வெளிக்குள் பாய்ந்தது.

அதிஷ்டவசமாக இ.போ.ச. பஸ் பயணிகள் சேவையில் ஈடுபடாத நிலையில் பஸ்ஸில் ஒரு சில இ.போ.ச ஊழியர்கள் மாத்திரம் பயணித்திருந்தனர்.

இந்நிலையில் விரைந்து செயற்பட்ட பொதுமக்கள், ஜேசிபி இயந்திரத்தின் உதவியுடன் பஸ்ஸை மீண்டும் வீதிக்கு கொண்டுவந்தனர். (05)

# 3 வயதுக் குழந்தையைத் தூக்கி தரையில் அடித்த தந்தை கைது

## அவிசாவளையில் சம்பவம்

அவிசாவளை பிரதேசத்தில் தனது மூன்று வயது குழந்தையை தூக்கி வந்து தரையில் அடித்ததாக கூறப்படும் தந்தையொருவர் நேற்று (திங்கட்கிழமை) கைது செய்யப்பட்டார் என அவிசாவளை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளை, தல்துவதோட்டத்தைச்சேர்ந்தசந்தேக நபர், குழந்தையைத் தரையில் அடித்துவிட்டு, தனது மனைவிக்கு முன்னால் சென்று விம் அருந்தியுள்ளார்.

இதனையடுத்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சந்தேக நபர் அடிப்படை சிகிச்சைகளை பெற்றுக்கொண்டு வைத்தியசாலையிலிருந்து தப்பிச் செல்லும்போது கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காயமடைந்த குழந்தையின் தலை பிளந்து காதுகளில் இருந்து இரத்தம் வெளியேறியதால், உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அவிசாவளை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (05)

# மட்டு கொக்குவில் பொலிஸ் பிரிவில் ஒரே நாளில் இரண்டு விபத்துக்கள்

## ஒருவர் உயிரிழப்பு; மற்றொருவர் காயம்

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குப்பிளாமடு பிரதேசத்தில் வீதியின் குறுக்கே உள்ள மழை நீர் வழிந்தோடும்வடிகான்பள்ளத்தின்ஊடாக பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தசம்பவத்தில்குப்பிளாமடு பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடையலோகிதராஜாகோவிந்தராஜா என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

குறித்த நபர் நேற்றிரவு 8.30 மணிக்கு மட்டக்களப்பில் இருந்து வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது குப்பிளாமடு வீதியின் குறுக்கே உள்ள மழைநீர் வழிந்தோடும் பள்ளத்தில் இருந்து மேலே செல்லும்போதே மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி, மரத்துடன் மோதியுள்ளது.

இதன்போது உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் வாகனமொன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதப்பட்ட மற்றுமொரு விபத்துச் சம்பவமும் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த நபரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலேயே சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# ஜானகவை நீக்கும் பிரேரணைக்கு எதிராக பல அரசியல் கட்சிகள் வாக்களிக்க முடிவு!



இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஜானக ரத்நாயக்கவை நீக்கும் பிரேரணைக்கு எதிராக பல அரசியல் கட்சிகள் வாக்களிக்கத் தீர்மானித்துள்ளன.

இதன்படி, ஐக்கிய மக்கள் சக்தி, ஜனதா விமுக்தி பெரமுன, சுதந்திர மக்கள் சபை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் மேலவை இலங்கை கூட்டணி ஆகியன இந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கவுள்ளனர்.

தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானம் இன்று (செவ்வாய்க்கிழமை) அறிவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# தனியார் வைத்திய சிகிச்சை நிலையத்தில் வலி நிவாரணிகளை திருடிய இருவர் கைது!

அநுராதபுரம், மே 23

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சட்ட வைத்தியர் ஒருவரின் தனியார் வைத்திய சிகிச்சை நிலையத்தில் 1,500 இற்கும் அதிகமான வலி நிவாரணிகளை திருடிய சந்தேகத்தில் இருவர் கைது செய் யப்பட்டனர் என அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரத்தைச் சேர்ந்த 24 மற்றும் 26 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம், மாத்தளை சந்திக்கு அருகில் அமைந்துள்ள வைத்திய நிலையத்தின் முன் கதவை உடைத்து உட்புகுந்த இருவர் குறித்த மருந்துகளை திருடிச் சென்றுள்ளனர் என வைத்தியர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# ஜூலி சங் திருந்திவிட்டார் சர்ச்சைக்குரிய ருவிட்டர் பதிவுகளை வெளியிடுவதில்லை!

## விமல் வீரவன்ஸ கிண்டல்

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் சர்ச்சைக்குரிய ருவிட்டர் பதிவுகளை வெளியிடுவதை நிறுத்திவிட்டார் என விமல்வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அரகலய பிளான் பி தற்போது முன்னெடுக்கப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தற்போது சர்ச்சைக்குரிய ருவிட்டர் பதிவுகளை வெளியிடுவதில்லை, அவர் நல்லவராக மாறிவிட்டார் யாராவது தும்மினால் கூட ருவிட்டர் பதிவுகளை வெளியிடுவதை அவர் வழக்கமாக கொண்டிருந்தார் என விமல்வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (05)

# மன்னிப்பு கேட்டதன் மூலம் ஜெரோம் தப்பமுடியாது

## டிரான் அலஸ் விடாப்பிடி

மன்னிப்பு கேட்பதன் மூலம் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தப்ப முடியாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மன்னிப்பு கோரியதால் அவருக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கைஎடுக்காமலிருக்கப்போவதில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யாராவது தவறிழைத்துவிட்டு மன்னிப்பு கோரினால் அதற்காக நாங்கள் விசாரணைகளை முன்னெடுக்காமலிருக்க முடியாது என குறிப்பிட்டுள்ள டிரான்அலஸ், கடந்தகாலத்தில் அவ்வாறு நாங்கள் செயற்படவில்லை எதிர்காலத்திலும் அவ்வாறு செயற்படப்போவதில்லை என குறிப்பிட்டுள்ளார்.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிரான விசாரணைகளை சிஐடியினர் முன்னெடுக்கின்றனர் எனவும் அவர் குறிபிப்பிட்டுள்ளார்.

சிஐடி விசாரணையின் போது அவருக்கு எதிராக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை அனைத்தும் குறித்து நாங்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம், நீதிமன்றம் அவருக்கு எதிராக பயணத்தடை விதித்துள்ளது. இதன் காரணமாக அந்த நபர் நாடுதிரும்பியதும் சிஐடியினரிடம் ஒப்படைக்கப்படுவார் என டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஜெரோம் பெர்னாண்டோ நாடு திரும்பியதும் சிஐடியினர் அவரை விசாரணைக்குட்படுத்தி வாக்குமூலம் பெறுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)


## வயல் காணி விற்பனைக்கு

மறவன்புலவில் ( தனங்கிளப்பு அருகில்) பிரதான வீதிக்கு அருகில் 19 பரப்பு வயல் காணி விற்பனைக்குண்டு. பரப்பு ஒரு இலட்சம், தரகர் தேவையில்லை தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் : 0773112692



ஆறு மாத DSL உத்தரவாதத்துடன்

Palma மின்கலங்கள்

IT Power Backupக்காக

dsl We lead the way...!

PALMA



7Ah | 9 Ah | 20 Ah | 26 Ah | 42 Ah
65 Ah | 100 Ah | 150Ah | 200 Ah
ரூ.5,814 இருந்து

மின்சார தராசுகள் & பொம்மைகளுக்காக
6Ah | 12 Ah
ரூ.2,223 இருந்து

மின் மோட்டார் சைக்கிள்களுக்கான
12Ah | 20 Ah | 24 Ah | 28 Ah | 45 Ah
ரூ.13,252 இருந்து

Douglas & sons (pvt) ltd நான்கு தசாப்தங்களாக இலங்கை வாடிக்கையாளர்களின் வாகன மற்றும் பிற தேவைகளுக்காக சர்வதேச தரத்திலான பேட்டரிகளை இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.

077 307 8799
070 163 0209

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இது எந்த வகையில் நியாயம்?

**சீன நாட்டைச் சேர்ந்த ஒருவர் போலிக் கடவுச் சீட்டில் நாட்டுக்குள் நுழைய முயன்றபோது அதிகாரிகளால் தடுக்கப்பட்டு, நாடு கடத்த இருந்த சமயம் இராஜாங்க அமைச்சர் ஒருவர் தலையிட்டு அவர் ஒரு முதலீட்டாளர் என்று கூறி அவரை விடுவித்திருக்கின்றார். அந்தச் சீன நாட்டவருடன் மற்றொரு சீன நாட்டவரும் மற்றொருவரும் கூட வந்துள்ளனர். மூவரையுமே அதிகாரிகள் நாடு கடத்த இருந்தபோது அமைச்சர் தலையிட்டுள்ளார்.**

**இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிலான் அலஸ், இந்த விடயத்தில் அதிகாரிகளுக்கு எதிராகத்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். அதாவது நடந்த தவறுக்குக் காரணமான இராஜாங்க அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்காமல், அமைச்சரின் உத்தரவைச் செயற்படுத்திய அதிகாரிகள் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.**

**"போலின் கடவுச்சீட்டுடன் பயணித்தவர் கைதுசெய்யப்பட்டவேளை தலையிட்டு விடுதலை செய்த இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணாண்டோவிற்கு எதிராக நடவடிக்கைஎதனையும்எடுக்கப்போவதில்லை. ஆனால், அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். தவறான உத்தரவுகளை குடிவரவுகுடிகயல்வு துறை அதிகாரிகள் பின்பற்றக்கூடாது" என்று அமைச்சர் ரிரான் அலஸ் தெரிவித்திருக்கிறார்.**

**போலிக் கடவுச் சீட்டுடன் கைது செய்யப்பட்டபோது அந்தச் சீன நாட்டவரர் அதிகாரிகளிடம் அடாவடியாக நடந்துகொண்டார் என்றும் இருந்தாலும் அமைச்சரின் எழுத்து மூல உத்தரவின் பேரில் அவர் பின்னர் விடுவிக்கப்பட்டார் என்றும் தகவல்கள் கூறுகின்றன. அதிகாரிகளுடன் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதன் பின்னரும் அவரை விடுவிக்கச் சொல்லி உத்தரவிட்ட அமைச்சருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் இல்லை, ஆனால் அமைச்சரின் உத்தரவைச் செயற்படுத்தியதற்காக அதிகாரிகள் மீது நடவடிக்கை என்பது இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டிலாவது நடக்குமா என்பது தெரியவில்லை.**

**சட்டத்தை மீறிசீனர்களைநாட்டுக்குள்நுழையவிட்டது அதிகாரிகளின் தவறு என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதேநேரம் அந்தத் தவறைச் செய்ய உத்தரவிட்ட அமைச்சர் குற்றமற்றவர் என்பதைத்தான் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.**

**அமைச்சர் ஒருவர் உத்தரவிட்டும் அதிகாரிகள் அதனைச் செயற்படுத்தாது இருக்கும் சூழல் இலங்கையில் கிடையாது. அப்படி நடந்தால் அந்த அதிகாரியை இடம் மாற்றம்செய்தோபழிவாங்கியோசித்திரிவதைப்படுத்தும் பழக்கம்தான் இங்கு உண்டு. அப்படிப்பட்ட நிலையில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளும் அமைச்சரின் உத்தரவை மீறுவதற்குப் பயந்திருக்கக்கூடும். எதற்கு வீண் வம்பு என்ற நிலைப்பாட்டிலேயே அவர்கள் அமைச்சரிடம் எழுத்து மூலம் உத்தரவைப் பெற்றுக்கொண்டு சீனர்களை விடுவித்திருக்கிறார்கள்.**

**எய்தவன் இருக்க அம்பை நோவான் ஏன் என்ற கதையாக எய்த அமைச்சர் இருக்க அம்புகளான அதிகாரிகளை மட்டும் தண்டிப்போம் என்பது எந்த வகையிலும் நியாயம் இல்லை. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவேண்டிய கட்டாயம் அமைச்சர்களுக்கும் இருக்கின்றது. அதிகாரிகள் தவறு செய்வதற்குத் தூண்டுவதும் தவறுதான். எனவே அமைச்சருக்கு எதிராகவும் நடவடிகக்கை எடுக்கப்படவேண்டும். இந்தத் தவறுக்காக இராஜாங்க அமைச்சரை உடன் பதவி நீக்கம் செய்யவேண்டும். அதைவிடுத்து அதிகாரிகளை மட்டும் தண்டிப்பது தேவையுமற்றது. நியாயமும் அற்றது.**

## பெருந்தோட்டங்களில் குடியிருக்கும் மக்கள் மீதான அத்துமீறல்கள், அடாவடிகள் நிறுத்தப்படவேண்டும்

### வேலுகுமார் வலியுறுத்து



பெருந்தோட்டங்களில் குடியிருக்கும் மக்கள் மீதான அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள் நிறுத்தப்பட வேண்டும் என நாவலப்பிட்டி பரனகல தோட்டத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னரான ஊடகவியலாளர் சந்திப்பில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறுகையில் -

பெருந்தோட்ட பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் பிரச்சினைகள் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

தோட்டங்களினது நிர்வாகம் கடுமையான நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் அமுல்படுத்தி வருகிறது.

இவ்வாறான சூழ்நிலையில் மக்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்குள்ளாகி வருகின்றனர். தோட்டங்களில் குடியிருக்கும் மக்கள் மீதான அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள் நிறுத்தப்படவேண்டும்.

கடந்த இருதசாப்த காலங்களில் பெருந்தோட்ட பகுதிகளின் நிலைமை மிக வேகமாக மாற்றமடைந்து வருகிறது.

தோட்டங்களில் குடியிருப்பவர்களில் ஒரு சிலரே தோட்டத் தொழிலாளர்களாக உள்ளனர்.

பெரும்பாலானவர்கள் தோட்டங்களில் குடியிருந்தாலும், அவர்கள் தோட்டத் தொழிலாளர்களாக இல்லை.

இவ்வாறான நிலையில் தோட்ட நிர்வாகத்துக்கும், தோட்டத்தில் குடியிருப்பவர்களுக்கும் இடையில் தொடர்ச்சியான முறுகல் நிலை காணப்படுகின்றது. இவை பல தோட்டங்களில் மோதல்களாக, கலவரங்களாக ஏற்பட்டிருந்தன.

இன்று நாவலப்பிட்டி பரனகல தோட்டத்தில் குடியிருக்கும், தோட்டத்தில் வேலை செய்யாத குடும்பங்களை லயன் குடியிருப்புகளில் இருந்து அகற்றுவோம் என தோட்ட நிர்வாகம் அச்சுறுத்தி இருக்கின்றது. அங்கே குடியிருப்பவர்களிடம் அடாவடித்தனமாக நடந்து கொண்டிருக்கின்றனர்.

அதன் பின்னர், தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி பொலிஸ் முறைப்பாடு ஊடாக ஓய்வுபெற்ற தொழிலாளி ஒருவரை கைதுசெய்திருக்கின்றனர். இவை மக்களிடையில் பாரிய அச்சுறுத்தலை, தமது எதிர்காலம் தொடர்பான பாதுகாப்பற்ற நிலையை தோற்றுவித்திருக்கிறது.

தோட்டங்களில் குடியிருக்கும் மக்களின் பாதுகாப்பு தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தோட்ட நிர்வாகங்களின் அத்துமீறிய செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். அது தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (05)

## 5 லட்சம் சீன சுற்றுலாப்பயணிகள் 2024 இல் இலங்கையின் இலக்கு!

இலங்கை கடன்நெருக்கடியிலிருந்துவிடுபடுவதற்காகசீனாவை சேர்ந்த சுற்றுலாப்பயணிகளை இலங்கைக்கு வரச்செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன்பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

2024 இலங்கை 5 வட்சம் சீன சுற்றுலாப்பயணிகளை இலக்குவைத்துள்ளது என சீனாவில் தெரிவித்துள்ள ஹரீன்பெர்ணாண்டோ இது கொவிட்டிற்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட சீன சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை விட இரண்டுமடங்கு அதிகம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சீனா சுற்றுலாப்பயணி ஒருவர் 5000 டொலர் செலவு செய்தாலும் அது சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து சமீபத்தில் கிடைத்த நிதி உதவிக்கு சமன் என ஹரீன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறையால் இலங்கையை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீட்கமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் வரை சீனாவிலிருந்து இலவச சுற்றுலா விசாவைவழங்கும்திட்டமொன்றை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளதாக தெரிவித்துள்ள ஹரீன் பெர்ணான்டோ, சீன கடவுச்சீட்டுடன் இலங்கைக்கு வரமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான விமான சேவைகளை அதிகரிப்பது தொடர்பில் சீன விமானசேவைகளுடன் பேச்சுகளை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (05)

## பாடசாலை மாணவியியுடன் அங்க சேஷ்டை இராணுவ சிப்பாய் மக்களால் நையப்புடைப்பு

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்.வசாவிளான் பகுதியில் வீதியால் சென்ற பாடசாலை மாணவியிடம் அங்க சேஷ்டையில் ஈடுபட்ட இராணுவ சிப்பாயை அப்பகுதி மக்கள் நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) மதியம் குறித்த சம்பவம் இடம்பெற்றநிலையில் இது தொடர்பில் பலாலிப் பொலிஸார் மற்றும் இராணுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தனிமையில் சென்ற பாடசாலை மாணவியை பின்தொடர்ந்த குறித்த இராணுவ சிப்பாய் அங்கசேஷ்டையில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் மாணவி குரலெழுப்பிய நிலையில் அங்கு கூடிய பொதுமக்கள் குறித்த இராணுவ சிப்பாயை நையப்புடைத்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

தமிழ் இராணுவ சிப்பாயான அந்த நபர் கடந்த காலத்திலும் இவ்வாறான சில்மிங்களில் சிக்கியிருந்தாரெனக் கூறப்படுகிறது. (05)

## 2022 மே 9 அரசியல்வாதிகளின் வீடுகள் எரிப்பு: மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு வாபஸ்

நாடளாவிய ரீதியில் கடந்த வருடம் மே மாதம் 9 ஆம் திகதி அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் வீடுகள் எரித்து நாசமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறுகோரி அமைச்சர் பந்துல குணவர்தன உள்ளிட்டோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நேற்று (திங்கட்கிழமை) மீளப்பெறப்பட்டது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பொது பாதுகாப்பு அமைச்சர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், நடந்த சம்பவங்கள் தொடர்பாக முறையான விசாரணை நடத்த நடவடிக்கை எடுப்பதாக தனது கட்சிக்காரர் தெரிவித்ததாக நீதிமன்றத்தில் கூறினார். மனுதாரர் தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, இதில் திருப்தியடைவதாகவும் அதனடிப்படையில் குறித்த மனுவை திரும்பப் பெறுவதற்கு அனுமதி வழங்குமாறும் கோரினார்.

இந்நிலையிலேயே மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த மனுவை வாபஸ் அனுமதியளித்தது.

பந்துல குணவர்தன, பிரசன்ன ரணதுங்க, ஹொன் சேமசிங்க, பிரசன்ன ரணவீர மற்றும் மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்ட அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகள் உட்பட 39 பேர் இது தொடர்பான மனுவை முன்வைத்திருந்தனர். (05)

## யாழ். பல்கலைக் கழகப் பொறியியல் பீடத்துக்கு தெரிவான மாணவர்களை உடன் அனுமதிக்குக!

### மானியங்கள் ஆணைக்குழு தலைவர் பணிப்புரை

கிளிநொச்சி, மே 23

கிளிநொச்சியில் அமைந்துள்ளயாழ்ப்பாணபல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்துக்கு காத்திருப்புப்பட்டியலின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு உடனடியாக அனுமதிக்குமாறு பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவால்அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, திறமை ஒழுங்கில் வெற்றிடங்களை நிரப்பும் முகமாக தெரிவுசெய்யப்படும் மாணவர்களை பதிவுசெய்வதற்கு அனுமதிக்காமல், திருப்பி அனுப்பும் அதிகாரம் பீடாதிபதிகளுக்கு இல்லை என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு தலைவரான சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்கவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி, அந்தந்த பல்கலைக்கழகங்களின் வெட்டுப்புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் முதல் பட்டியலின்படி, 2021/2022 கல்வி ஆண்டுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டன.

எனினும், உயர்தரப் பெறுபேறுகளின் மீளாய்வுக்குப் பின்னர், வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்களை வெற்றிடங்களை நிரப்பும் பட்டியல் மூலம் அனுமதிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தது. ஆனாலும், யாழ்ப்பாண பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் காணப்படும் வளப் பற்றாக்குறை காரணமாக 2021ஃ2022 கல்வி ஆண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களே ஆயினும், 2021ஃ2022 கல்வி ஆண்டுப் பிரிவினருடனேயே அவர்கள் கல்வி கற்க முடியும் என மாணவர்கள் அனுமதிக்காக பதிவுசெய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த விடயத்தை பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்ததையடுத்தே, அனுமதிக்கப்படும் மாணவர்களின் பதிவை நிராகரிக்கும் அதிகாரம் பீடாதிபதிக்கு இல்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பொறியியல் பீடத்தால் அனுமதிக்கப்படக் கூடிய மாணவர்களின் தொகை என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கைக்கு உட்பட்டே வெற்றிடங்கள் நிரப்பும் பட்டியலும் தயாரிக்கப்படுகிறது. அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை அனுமதிப்பதில்லை என பீடம் முடிவெடுக்க முடியாது.

மானியங்கள் ஆணைக் குழுவால் தெரிவுசெய்யப்படும் மாணவர்களை அனுமதித்தே ஆக வேண்டும். அனுமதிக்க முடியாத நிலைமை இருந்தால், பட்டியல் தயாரிக்கப்படுவதற்கு முன்னர் பீடாதிபதி அதைப் பற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்திருக்க வேண்டும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார். (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 07 ஞாயிற்றுக்கிழமை 21.05.2023 கதிர் 64

## எம்.பிக்கள் மீதான பிடியை இறுக்குகின்றது பெரமுன

தனது உறுப்பினர்கள் மீதான பிடியை இறுக்கத் தொடங்கியிருக்கிறது பொது ஜன பெரமுன. இதன் முதற்கட்டமாக கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு வருகை தராமலும் கட்சிச் செயற்பாடுகளில் பங்கெடுக்காமலும் இருப்பவர்கள் குறித்து அந்தக் கட்சி கவனம் செலுத்தியுள்ளது.

"எமது கட்சியின் உறுப்புரிமையைப் பெற்று எமது கட்சிச் சின்னத்தின் கீழ் வெற்றிபெற்று தற்போது தம்மைச் சுயாதீன அணியினர் என்று கூறிக்கொண்டு அரசியல் வங்குரோத்து அடைந்தவர்கள் இருக்கின்றார்கள். இதைவிடவும், ஆட்சியில் பங்காளிகளாக உள்ள சிறு குழுவினரும் கட்சியின் செயற்பாடுகளில் பங்கெடுப்பதில்லை"

2☞

## சீன சினோபெக் நிறுவனத்துடன் எரிபொருள் விற்பனை ஒப்பந்தம்

### இன்று கைச்சாத்திடப்பட்டது

இலங்கையில் எரிபொருள் விற்பனை செய்வதற்காக சீனாவின் சினோபெக் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு இன்று இடம்பெற்றதாகத் தெரிவிக் கப்பட்டது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, இலங்கையில் பெட்ரோலியப் பொருட்களின் இறக்குமதி, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை தொடர்பான இந்த நீண்ட கால ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சினோபெக் ஃப்யூவல் ஒயில் லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் சீனா, சிங்கப்பூரில் உள்ள அதன் தாய் நிறுவனத்துடன் பேச்சுக்கள் முடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## அமைச்சர் டிரான் அலஸின் உயிருக்கு அச்சுறுத்தலாம்

தனது உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆனால், யாரால் அந்த அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவிக்கவில்லை.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் இன்று தனிப்பட்ட அழைப்பாகச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவரிடத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் இந்தப் பதவியில் இருக்கும்வரை போதைப் பொருட்களை கைப்பற்றுவது, பாதாள உலக குழுக்களை ஒழிப்பதைச் செய்ய வேண்டும்.

2☞

# 3 நாட்களுக்குள் கடவுச்சீட்டு பெற புதிய திட்டம் அறிமுகம்

### அடுத்த மாதம் முதல் தொடங்கும் என்கிறார் அமைச்சர்



மூன்று நாட்களுக்குள் கடவுச்சீட்டு வழங்கும் புதிய முறை அடுத்த மாதம் முதல் தொடங்கப்படுமென பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இதற்காகப் பிரதேசசெயலகங்களில் புகைப்படங்கள் மற்றும் கைரேகைகளைச் சேகரிப்பதற்கென மேலும் 50 இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடவுச்சீட்டுக்களைப் பெறுவதில் தமாதங்கள் காணப்படுவதாகத் தொடர்ச்சியான விமர்சனங்கள் காணப்பட்டன.

அதற்குப் பின்னர் அது பற்றி நாம் கரிசனை கொண்டதோடு, விரைந்து புலனாய்வுப் பிரிவினர் ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

அதற்கு அமைவாக, கடந்தவாரம்கூட 20முதல் 25ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொண்டு கடவுச்சீட்டுககளைப் பெற்றுக்கொடுக்கும் முகவர்களைக் கைது செய்துள்ளோம். இந்த விடயத்துடன் தொடர்புடைய பெண் அதிகாரியொருவரையும் கைது செய்துள்ளோம். குறித்த முகவர்களின் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருவதற்காக தொடர்ந்தும் புலனாய்வாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் மூன்று நாட்களுக்குள் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கான திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளோம். அதற்கான விசேட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதல் இந்தச் செயற்பாடு முன்னெடுக்க முடியும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

## சீனப் பிரஜையின் போலிக் கடவுச்சீட்டு விவகாரம் அதிகாரிகளுக்கு எதிராகவே நடவடிக்கை பாயும்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

சீனாவைச் சேர்ந்த இருவர் போலிக் கடவுச்சீட்டைப்பயன்படுத்தி நாட்டிற்குள் நுழைந்த சம்பவம் தொடர்பில் குடிவரவுகுடியகல்வுதுறை அதிகாரிகளிற்கு எதிராக விசாரணைநடத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு விவகாரங்களிற்கான அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் இன்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போலின் கடவுச்சீட்டுடன் பயணித்தவர் கைதுசெய்யப்பட்டவேளை தலையிட்டு விடுதலை செய்த இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணாண்டோவிற்கு எதிராக நடவடிக்கை எதனையும் எடுக் கப்போவதில்லை. ஆனால், அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். தவறான உத்தரவுகளை குடிவரகுடிகயல்வுதுறை அதிகாரிகள்பின்பற்றக்கூடாது.

போலிகடவுச்சீட்டுடன் கைது செய்யப்பட்ட சீன பயணியை இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணாண்டோ தலையிட்டு விடுதலை செய்தார் எனத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

போலிக் கடவுச்சீட்டுடன் சீனப் பயணியொருவரும் அவரது இரு நண்பர்களும் கொழும்பு விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் நுழைய முயற்சி செய்த சமயம் குடிவரவு குடியகல்வு திணைக் கள அதிகாரிகள் அவர்களைக் கண்டுபிடித்தனர். அப்போது அவர்கள் அடாவடியான விதத்தில் நடந்துகொண்டனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. போலிக் கடவுச்சீட்டுடன் நுழைந்த சீன பிரஜையை அமைச்சிற்கு அழைத்து விசாரணை செய்யவுள்ளதோடு, சீன தூதரகத்தின் ஆலோசனையின்பின்னர் ஏனைய நடவடிக்கைகள் எடுக் கப்படவுள்ளன - என்றார். மே 18 கொழும்பு விமான நிலையத்திற்கு வந்துசேர்ந்த சீனப் பயணிகள் வேறு நாட்டொன்றின்கடவுச்சீட்டைக் கையளித்துள்ளனர் அவற்றில் ஒருவருடையது போலியான கடவுச்சீட்டு என அதிகாரி கள் கண்டு பிடித்துள்ளனர். இவர்கள் விடயத்தில் தலையிட்ட இராஜாங்க அமைச் சர் போலி கடவுச்சீட்டுடன் கைது செய்யப்பட்டவர் ஒரு முதலீட்டாளர் என தெரிவித்து அவரை விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இதனைத் தொடர்ந்து இரண்டு சீன பிரஜைகளும் ஒரு எகிப்திய பிரஜையும் சனிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். 03



## கிழக்கின் புதிய ஆளுநரை நேரில் சந்தித்தார் சுமந்திரன்

கிழக்குமாகாணஅபிவிருத்தித்திட்டங்கள்குறித்துஆளுநருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துரையாடியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் கலந்துரையாடினார் என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் உள்ள ஆளுநர்செயலகத்தில் இன்று இந்தச் சந்திப்பு நடைபெற்றது. (02)

## சமூகப் பாதுகாப்பு உதவித் திட்டங்களில் மலையக மக்களை புறக்கணிக்கவில்லை

### அமைச்சர் ஜீவன் தொண்டமான் அறிவிப்பு



சமுர்த்தி உள்ளிட்ட சமூக பாதுகாப்பு உதவி திட்டங்களில் இருந்து மலையக பெருந்தோட்ட மக்களின் பெயர்கள் நீக்கப்படுவதாகக் கூறப்படுவது போலிப் பரப்புரை என்று தெரிவித்தார் அமைச்சர் ஜீவன் தொண்டமான். "போலியான பரப்புரையை முன்னெடுத்து, மக்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்தச் சிலர் முயற்சிக்கின்றனர். இது உண்மை கிடையாது. இம்முறை உரிய வகையிலேயே பதிவுகள் இடம்பெற்றுள்ளன. உதவி திட்டங்களை பெறுவதற்கு தகுதியான அனைவருக்கும் அது கிடைக்கும் – என்றார் அவர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும்இ நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இன்று மதியம் தனது அமைச்சில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

அப்போதே அவர் இதனைத் தெரிவித்தார் என்று அவரது அமைச்சின் ஊடகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சமுர்த்தி உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு நிதி உதவிகளின் போது மலையக சமூகம் ஓரங்கப்பட்டுகின்றது. அவர்களின் பெயர்கள் வெட்டப்படுகின்றன என்ற பரப்புரையை எதிரணிகள் சில முன்னெடுத்து, மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த முற்படுகின்றன. முன்னர் இந்தக் குறைபாடு இருந்திருக்கலாம். பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வேலை உள்ளது. ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன கிடைக்கின்றன எனக்கூறி கிராம அதிகாரிகளால் அவர்கள் ஒதுக்கப்பட்டிருக்கலாம். அப்போதும் நாம் தற்காலிக தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தோம்.

இம்முறை அதிகாரிகள் நேரில் சென்று தகவல்களைத் திரட்டினர். எவருக்கும் பாகுபாடு காட்டப்படமாட்டாது. உதவிக் கொடுப்பனவை பெறுவதற்குத் தகுதியான அனைவருக்கும் அது நிச்சயம் கிடைக்கும். இது தொடர்பில் நிதி இராஜங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுடன் நாம் பேச்சு நடத்தினோம். நாடாளுமன்ற உரையின்போது பெருந்தோட்ட மக்கள் பற்றி அவர் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

15 லட்சத்துக்கும் மேற்பட்ட மலையகத் தமிழர்கள் உள்ளனர். அவர்களில் ஒரு லட்சத்து 35 ஆயிரம் பேர்வரையிலானோர் பெருந்தோட்டங்களில் தொழில்புரிகின்றனர். இவர்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களை முறையாக அடையாளம்

2☞

## யாழ். மக்களின் குடிதண்ணீர் சிக்கலுக்கு தீர்வு காண முக்கிய கவனம் எடுப்பேன்

### கடமைகளை ஏற்ற பின்னர் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணமக்களின்குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முக்கிய கவனம் செலுத்துவேன் என்று தெரிவித்தார் வடக்குமாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வடக்குமாகாண ஆளுநராக மீண்டும் நியமிக்கப்பட்ட பி.எம்.எஸ். சார்ள்ஸ், இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் தனது கடமைகளைச் சம்பிரதாயபூர்வமாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

மதத் தலைவர்களின் ஆசி மற்றும் சம்பிரதாயச் சடங்குகளுடன் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம்கருத்துத்தெரிவித்தபோதே ஆளுநர் யாழ்ப்பாண மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

என்னைவாழ்த்துவதற்கு வருகை தந்தமதகுருமார்சிலகோரிக்கைகளை முன் வைத்திருந்தார்கள். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யதார்த்தமாக அணுகி அதற்குத் தீர்வு பெற்று தருமாறு கூறியிருக்கின்றார்கள். எனவே அந்த விடயத்தினை நான் சரியான முறையில் அணுகி அதற்கு தீர்வுகளை பெற்றுத் தர முயற்சிப்பேன்.

இந்த மாகாணத்தில் இருக்கின்ற அனைத்து மதங்களும் தங்களுடைய தனித்துவமான மத அனுஷ்டானங்களை மேற்கொள்வதற்கான உரிமைகளை வழங்கவேண்டும்என்பதில் இன்றைய ஆட்சி உறுதியாக இருக்கின்றது. அந்த வகையில் அதற்கான சகல ஏற்பாடுகளையும் எடுக்க நான் முயற்சிக்கின்றேன்.

அதேபோல வட மாகாண அவைத் தலைவர் மாகாண மக்களின், குறிப்பாக யாழ். மாவட்ட மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சனை சம்பந்தமாக எடுத்துக்கூறியிருந்தார். ஏற்கனவே பாலியாறு சம்பந்தமான ஒரு பிரேரணையை தாங்கள் தயாரித்து வைத்திருப்பதாகவும் அதை முன்னெடுத்து செல்லுமாறும் கேட்டிருக்கின்றார். அது சம்பந்தமாகவும் நான் உரிய நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக உள்ளேன்.

யாழ்ப்பாண மக்களுக்கு நீண்டகாலமாக இருக்கின்ற குடிதண்ணீர்ப் பிரச்சினையை நான் உணர்ந்திருக்கின்றேன். நான் கூட இங்கு வருகின்றபோது குடிதண்ணீர்ப்பிரச்சினையை தனிப்பட்டரீதியாகஉணர்ந்திருக்கின்றேன். எனவே அந்தப் பிரச்சினையைத் தீர்க்க நிச்சியமாக முக்கியமாக கவனம் எடுப்பேன் – என்றார்.

# திருகோணமலையில் குடிநீர் குழாய் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பம்!





திருகோணமலை பகுதியில் சுத்தமான குடிநீரை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் புல்மோட்டை நிலாவெளி, சம்பல் தீவு மற்றும் ஆனந்தகுளம் ஆகிய பகுதிகளை இணைக்கும் குடிநீர் விநியோகத்துக்கான குடிநீர் குழாய் பொருத்தும் நடவடிக்கை நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

67.3 மில்லியனுக்கும் அதிகமான நிதி உதவியின் ஊடாக மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டம் 28 கிலோ மீற்றர் பரப்பை கொண்டது.

இந்தத் திட்டம் நிறைவடைந்தவுடன் 300 இற்கும் அதிகமான புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுவதுடன்,திருகோணமலை நகரம்மற்றும்அதை அண்டியுள்ள கிராம பகுதிகளுக்கு தடையின்றி குடிநீர் வழங்குவதற்காகவே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை,திருகோணமலை, கந்தளாய்ஆகியநகரங்கள்மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்கு குடிநீர்வழங்கும்கந்தளாய்நீர்சுத்திகரிப்பு நிலையத்தை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்துக்கு கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்டிருந்தஅமைச்சர்ஜீவன் தொண்டமான், கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டதுடன், அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

தற்போதைய நிலைவரம் மற்றும் விஸ்தரிப்புக்கான தேவைப்பாடுகள் பற்றியும் கேட்டறிந்துகொண்டார்.

இந்நிகழ்வில்அமைச்சர்உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஷ்வரன், கபில அத்துகோரல, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதி தலைவர் சஞ்சீவ விஜேகோன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கிழக்கு மாகா ணத்துக்கான பிரதி பொது முகாமையாளர் எம்.எம்.நசீல், உதவி பொது முகாமையாளர் டீ.ஏ.பிரகாஷ், பிராந்திய முகாமையாளர் பீ.சுதாகரன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, தேசியநீர்வழங்கல்வடிகாலமைப்பு சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(05)



## எம்.பிக்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவித்தார் கட்சியின் செயலாளர் சாகர காரியவாசம்.

பத்தரமுல்லவில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் இன்று காலை செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சியுடன் தொடர்பின்றி இயங்கும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாகச் செயற்படுவார்களாயின் அதற்கான பதிலை மக்களே வழங்குவார்கள்.

இந்த விடயத்தில் எதிர்காலத்தில் நாம் விரைந்துநடவடிக்கைளைமுன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். இவர்களின் செயற்பாடுகளால் பொது ஜனப் பெருமுனவின் பயணத்தினை நிறுத்த முடியாது – என்றார்.

## அமைச்சர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கலாம்.

எமது பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு பணியாற்ற நாம் அறிந்துக் கொள்ளவேண்டும். அச்சுறுத்தல் இருக்கின்றது என்பதற்கான ஒரு அடியைக்கூட பின்நோக்கிவைக்கமாட்டேன். இன்னும்ஒரு அடியை முன்நோக்கி வைப்பேனே அன்றி பின்நோக்கி வைக்கமாட்டேன் – என்றார்.

## சமூகப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணவேண்டும். மாறாக முழுச் சமூகத்தையும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சமூகமாக அடையாளப்படுத்த முற்படுவது, அந்தச் சமூகத்தை கொச்சைப்படுத்தும் செயலாகும். ஆகவே, முறையான வகையிலேயே பெயர்ப் பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு லட்சத்து 65 ஆயிரம் பேரில், 85 ஆயிரம் பேர் வரை பெருந்தோட்டப்பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இது 52 வீதமாகும். பட்டியலில் குறைப்பாடுகள் உள்ளனவா என்பது பற்றி ஆராய்ந்து, அவற்றை நிவர்த்தி செய்யும் பணியிலும் ஈடுபடுகின்றோம். எனவே, மக்கள் மத்தியில் வதந்திகளை பரப்பி, குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றோம் – என்றார்.

# மட்டு. நரிப்புல் தோட்டம் நடேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்





மட்டக்களப்பு மாவட்டத்தில் இணைந்த கரங்கள் அமைப்பால் ஆயித்தியமலை மட்ஃ நரிப்புல் தோட்டம் நடேஸ்வரா தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கும் நிகழ்ச்சி இன்று காலை பாடசாலையின் அதிபர் வேலுப்பிள்ளை மாதவன் தலைமையில் இடம்பெற்றது.

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களுக்கான நிதிப்பங்களிப்பை ஆஸ்திரேலியா சிட்னி நகரில் வசிக்கும் ராஜா சூப்பர் மார்க்கட் உரிமையாளர் வழங்கி இருந்தார். மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் மிகவும் அதிகஷ்ட, தொழில் வாய்ப்பற்று வாழும் குடும்ப மாணவர்கள் கல்வி கற்கும் ஆயித்தியமலை மட்ஃநரிப்புல் நடேஸ்வரா தமிழ் வித்தியாலய பாடசாலையில் கல்வி கற்கும் 92 மாணவர்களுக்கு இணைந்த கரங்கள்அமைப்பால்கற்றல்உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சப்பிரமணியம் கணேஸும், விடே அதிதியாக ஆயித்தியமலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் அதிபர் ரி. வித்தியானந்தன் மற்றும் இந்த நிகழ்விற்கு அனுசரணை வழங்கிய ஆஸ்திரேலியா சிட்னி ராஜா சூப்பர் மார்க்கட் உரிமையாளரின் சகோதரர் ஆர்.தயாளன் மற்றும் கே.மனோகரன், ஆர். மனோநிலா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் பாடசாலையின் ஆசிரியர்கள் பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இணைந்தகரங்கள்அமைப்புகல்விற்கான சேவையை ஆரம்பித்து ஒரு வருடமானாலும் இன்றைய இந்தப் பாடசாலையுடன் சேர்த்து நூறு பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கி அவர்களின் கல்விச் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான லோ.கஜரூபன், காந்தன், சி.துலக்சன், மா. ஜெயநாதன், சிருஸ்காந்த், சதீஸ்குமார், ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மருத்துவ மாதுக்களுக்கான நியமனங்கள் வழங்கி வைப்பு









மத்திய சுகாதர அமைச்சால் கிழக்கு மாகாணத்திற்கு நியமனம் செய்யப்பட்ட 5 பொது சகாதார மருத்துவ மாதுக்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதன் வழங்கி வைத்தார். (05)

# சுதந்திர முன்னணியின் பொதுசெயலர் விவகாரம்; தேர்தல்கள் ஆணைக்குழு அறக்கை வெளியீடு!



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் தொடர்பில் எழுந்துள்ளசர்ச்சை தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தவிகாரம் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரை அமைச்சர் மஹிந்த அமரவீரவை அல்லது திலங்க சுமதிபாலவை சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராக அங்கீகரிக்க முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராக தம்மை அங்கீகரிக்குமாறு திலங்க சுமதி பால அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்தார்.

அதனையடுத்து, தாமே சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக தொடர்வதாக அமைச்சர் அமரவீர தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தார்.

இவ்விரு கோரிக்கைகளையும் பரிசீலித்த தேர்தல்கள் ஆணைக்குழு விசாரணைகள் முடியும் வரை இருவரையும் கட்சியின் பொதுச் செயலாளராக ஏற்றுக்கொள்ள மாட்டோம் என அறிவித்துள்ளது. (05)

# அரசால் வழங்கப்படும் சகல உரிமைகளும் மலையக மக்களுக்கும் கிடைக்கவேண்டும்!

## ‘மலையகம் 200’ நிகழ்வில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானங்கள்

மலையக மக்களை ஒரு தனித் தேசிய இனமாக பிரகடனப்படுத்தி, தேசிய நீரோட்டத்தில் உள்வாங்கப்பட்டு, ஏனைய சமூகங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் சகல உரிமைகளும் மலையக மக்களுக்கும் கிடைப்பதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் என சமூக செயற்பாட்டாளரான பீ. கௌத்தமன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்று வந்த ’மலையகம் 200’ நிகழ்வுகளின் இறுதி நாளான நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நுவரெலியா புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது சமூக செயற்பாட்டாளர் பீ. கௌத்தமன் மேற்படி விடயங்கள் அடங்கிய தீர்மானங்களை சமர்ப்பித்துள்ளார்.

அவர் அத்தத் தீர்மானங்கள் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் –

மலையக பெருந்தோட்ட மக்கள் குடியிருக்கும் காணியும் குடியிருப்புகளும் கிராமங்களாக மாற்றப்பட்டு, அவர்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின் 40 வருட காலம் பிரஜாவுரிமை பரிக்கப்பட்டு நாடற்றவர்களாக இந்த நாட்டில் வாழ்ந்துள்ளோம். ஏனைய சமூகங்களைப் பார்க்கும் போது எமது மலையக சமூகம் பின்தங்கிய சமூகமாக வாழ்ந்து வருகிறது. அவற்றை நிவர்த்தி செய்வதற்காகத் தீவிர திட்டமொன்றை அரசாங்கம் வடிவமைத்து அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதனை அரசாங்கம் வடிவமைக்கும் போது இவ்வளவு காலம் அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டிருந்த இந்த சமூகத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதில் விசேடமாக மலையக மக்களுக்கான காணி உரிமை குடியிருப்புகளும் உறுதி செய்யப்பட வேண்டும்.

அது மாத்திரமல்ல, தோட்டப் பகுதியில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளையும் வைத்திய நிலையங்களையும் அரசாங்கம் பொறுப்பேற்று, சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவந்து தேவையான வைத்திய சேவைகளை செய்து கொடுக்க வேண்டும்.

பெருந்தோட்ட பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு தகுதி வாய்ந்த கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப ஆசிரியர்களை நியமித்து, அந்தப் பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக மாற்றி, கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

தொழில்நுட்ப கல்லூரிகள் பல இடங்களில் தமிழ்மொழியில் இயங்குவதில்லை. அவ்வாறான தொழில்நுட்பக் கல்லூரிகளை உருவாக்கி தமிழ் மொழியில் கற்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நுவரெலியாவில் ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும். இதை தவிர 10 ஆண்டு அபிவிருத்தி வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டும்.

எங்களது தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு ஏற்ப சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். இலங்கையில் இருக்கும் தொழில் பாதுகாப்புச் சட்டம் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

எங்களது பெண்கள் களத்திலும் வீட்டுப்பணிப் பெண்களாக தொழில் புரியும்போது எந்த விதமான பாலியல் துன்புறுத்தலுக்கும் உட்படுத்தப்படாதவாறு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

அதேபோல பல்வேறு இடங்களில் தொழில் புரியும் எமது மக்களுக்கும், எமது தொழிலாளர்களுக்கு ஏனைய சமூகத்தினருக்கு வழங்கப்படும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

மலையக மக்கள் இலங்கையில் குடியேறி 200 வருடங்கள் கடந்தும் இன்னும் போராட்டங்களை நடத்தியே வாழ்கின்றார்கள். ஆகையால், இந்த மலையக சமூகத்தையும் தேசிய நீரோட்டத்தில் உள்வாங்கி, அவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானங்களை முன்வைத்தார். (05)

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்பாக நாட்டை நிர்வகிக்கிறார்

## ரோஹித அபேகுணவர்தன புகழாரம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறந்த முறையில் நாட்டை நிர்வகிக்கிறார். ஆகவே, ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் வெகுவிரைவில் ஒன்றிணைவார்கள் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.



களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட தன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் அரசியல் கொள்கையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால் அரசியல் கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை சிறந்த முறையில் நிர்வகிக்கிறார். குறுகிய காலத்துக்குள் நாடு வழமைக்குத் திரும்பியுள்ளது. எரிபொருள், எரிவாயு ஆகியவற்றுக்கான வரிசை யுகம் நிறைவு பெற்றுள்ளது. பெரும்பான்மை பலத்துடன் நாட்டுக்காக விட்டுக்கொடுப்புடன் செயற்படுகிறோம்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த வேளை அரசாங்கத்தை ஏற்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி உட்பட நாடாளுமன்றத்தில் உள்ள சகல எதிர்க்கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆசை; ஆனால் பயம் என்பதால் எவரும் தற்துணிவுடன் செயற்படவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிபந்தனையற்ற வகையில் அரசாங்கத்தைப் பொறுப்பேற்க முன்வந்தமையால் அவருக்கு முழுமையான ஆதரவு வழங்கினோம். பிரச்சினைகளுக்குக் குறுகிய காலத்துக்குள் தீர்வு கண்டுள்ள பின்னணியில் எதிர்க்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் ஒன்றிணையத் தயாராக உள்ளார்கள். – என்றார். (05)





# கென்யோன் நீர்த் தேக்கத்தில் சுத்திகரிப்புப் பணிகள் தீவிரம்!

கடந்த சில நாள்களாக மத்திய மலைநாட்டில் மாலை வேளையில் பெய்த கன மழையால் லக்ஸபான நீர் மின் நிலைய மின் உற்பத்திக்கு நீர் வழங்கும் கென்யோன் நீர்த் தேக்கத்தில் அதிகளவில் குப்பைகள் நிறைந்து காணப்பட்டிருந்தன.

இந்நிலையில், நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணி முதல் கென்யோன் நீர் மின் நிலைய பணியாளர்கள் மூலமாக இந்த நீர்த் தேக்கத்தின் வான் கதவுகள் மற்றும் நீர்த் தேக்கத்தின் கீழ் பகுதியில் உள்ள நீரை வெளியேற்றும் குழாய் வழியாக நீரை அகற்றி, அந்த நீர்த் தேக்கத்தில் உள்ள அனைத்து குப்பைகளும் அகற்றப்பட்டு மீண்டும் நீர் நிரப்பும் பணி இடம்பெற்றுள்ளது.

இதன்போது அந்த நீர்த் தேக்கத்தில் நிறைந்து காணப்பட்ட, வனப் பகுதியில் இருந்துவந்த கழிவுகள், அப்பகுதி குடியிருப்பாளர்களால் வீசப்பட்ட பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் பொலித்தீன் உறைகள் போன்றவை அகற்றப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டது. (05)

# 59 சுகாதார வைத்திய வலயங்கள் டெங்கால் அதி அவதானத்துக்குள்!

மழையுடனான காலநிலை தொடர்வதால் டெங்கு நோய் பரவல் தீவிரமடைந்துள்ளது. நாடளாவிய ரீதியில் உள்ள 370 சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயங்களில் 59 அலுவலகங்கள் அதி அவதானத்துக்குரிய பகுதிகளாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

ஆகவே, பொதுமக்கள் எச்சரிக்கையுடனும் பாதுகாப்புடனும் செயற்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

கடந்த ஜனவரி மாதம் முதல் நிறைவடைந்த காலப்பகுதியில் மாத்திரம் சுமார் 35,675 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளார்கள்.

மே மாதம் முதலாம் திகதியில் இருந்து 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 5967 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் அதிக நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள். இதற்கமைய, மேல் மாகாணம் டெங்கு நோய் தீவிரமாக பரவும் அவதானமிக்க மாகாணமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டம், வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டம் ஆகிய பகுதிகளில் டெங்கு நோய் பரவல் தன்மை தீவிரமடைந்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள 370 சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயங்களில் 59 காரியாலயங்கள் அதி அவதானத்துக்குரிய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

சுற்றுப்புற சூழலில் நீர் தேங்கியிருக்காத வகையில் சூழலை பாதுகாப்பாக வைத்திருக்க பொதுமக்கள் பொறுப்புடனும் அவதானத்துடனும் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

தென் மாகாணத்தில் டெங்கு நோய் பரவலை தடுக்கும் வகையில் நாளை (செவ்வாய்க்கிழமை) முதல் எதிர்வரும் சனிக்கிழமை 27ஆம் திகதி வரையான காலப்பகுதி ’டெங்கு ஒழிப்பு’ வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என தென் மாகாண ஆளுநர் விலி கமகே தெரிவித்தார். (05)

# இரண்டாங்கட்ட டெங்கு ஒழிப்பு கல்முனையில் வேலைத் திட்டம்!







ஜனாதிபதியின் டெங்கு காட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர ஆணையாளர் அஸ்மி ஆதம்லெப்பையால் முன்னெடுக்கப்பட்ட இரண்டாங்கட்ட டெங்கு ஒழிப்பு சிரமதானம் நேற்று கல்முனை வடக்கு பிரதேசத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் சிரேஷ்ட ஊடகவியலாளர் யு. எம். இஸ்ஹாக் தலைமையில் கல்முனை வடக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மணச்சேனை ஆகிய கிராமங்களில் இந்த சிரமதானப் பணி சிறப்பாக இடம்பெற்றது.

நிகழ்வில் கல்முனை மாநகர சபை சுகாதாரப் பிரிவின் சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர் ஏ. எம். அதுகம் உட்பட உதவி மேற்பார்வை உத்தியோகத்தர்களான ஈ. இராகவான், ஆர். லிங்கராஜா, எம். எம். எம். றிஸ்வான் ஆகியோரும் மாநகர சபை சுகாதார ஊழியர்களும் கலந்துகொண்டனர். மாநகர ஆணையாளரின் அதிரடி நடவடிக்கை காரணமாக பெருந்தொகையான டெங்கு பரவுவதற்கு காரணியான கழிவு பொருள்கள் சேகரிக்கப்பட்டன.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சினோபெக் வருகை மாற்றத்தை உருவாக்குமா?

இலங்கையின் நிலையான மற்றும் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் முன்னணி சர்வதேச எரிபொருள் நிறுவனமான சினோபெக் உடன் கொழும்பு அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து இலங்கையில் எரிபொருளுக்கு ஏற்பட்ட கடும் தட்டுப்பாடான நிலையைச் சமாளிப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்களை இந்தச் சந்தைக்குள் அனுமதிப்பது என்று ஆட்சியாளர்கள் முடிவு செய்தனர். அதனடிப்படையில் மூன்று நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுமிருக்கின்றன. அவற்றில் முதலாவதுதாக சீனா இப்போது களத்திற்கு வந்துள்ளது.

அரசுத்தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இன்று அரசுத் தலைவர் அலுவலகத்தில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் எம். பி. டி. யூ. கே. மாபா பதிரனவும் சினோபெக் நிறுவன எரிபொருள் உற்பத்தி மற்றும் விநியோக திணைக்கள முகாமைத்துவப் பணிப்பாளர் சென் சென்க்மிம் ஜனாதிபதி முன்னிலையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இலங்கையில் நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் – நுகர்வோர் சிரமங்களை எதிர்நோக்காத வகையில் – தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு இந்த முக்கிய நடவடிக்கையை எடுத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

இலங்கை எதிர்கொண்ட, எதிர்கொண்டுவரும் பிரச்சினைக்கு சீன நிறுவனம் உள்ளே வருவது மட்டுமே தீர்வாக அமையுமா என்பது கேள்விக்குறியே. ஏற்கனவே இலங்கையின் எரிபொருள் விற்பனைச் சந்தையில் இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் (ஐஓசி) இருக்கின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்தத் துறையில் கொண்டிருந்த ஏகபோக உரிமையை உடைத்து இந்தியாவை அதற்குள் நுழைத்தபோது, போட்டித் தன்மை எரிபொருள் விலையைக் குறைப்பதற்கு உதவும் என்றார்கள் ஆட்சியாளர்கள். ஆனால், அப்படியெதுவும் நடக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பே இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் தனது விலைகளை உயர்த்திய பல சந்தர்ப்பங்களைத்தான் நாடு கண்டிருக்கிறது. பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டபோது – நாடு எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டபோது – அதனை நிவர்த்திக்கவோ, சமாளிக்கவோகூட இந்திய நிறுவனத்தால் முடியவில்லை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அப்படியிருக்கும்போது சீன நிறுவனம் வந்தவுடன் மட்டும் நாடு எதிர்நோக்கும் பிரச்சினை தீரும் அல்லது குறையும் என்று எதிர்பார்க்க முடியாது. அதற்குப் பதில் எண்ணெய்ச் சந்தையில் இந்திய – சீன போட்டி –மோதல் – மேலும் சிக்கல்களை உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். அது இலங்கையின் இந்திய – சீன ஆதிகப் போட்டியையும் வலுப்படுத்தும்.

சந்தையில் தற்போது புதிய சில்லறை வழங்குநர்களாக நுழையும் நிறுவனங்களுக்கான முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாக, உள்நாட்டு வங்கிகளில் தங்கியிருக்காமல் அந்நியச் செலாவணித் தேவைகளைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளும் திறன் இருக்க வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது. அதன்படி, இந்த நிறுவனங்கள் குறைந்தபட்சம், செயற்படத் தொடங்கி ஓராண்டு காலத்திற்கு எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு தங்கள் சொந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும்.

இந்த நிபந்தனையின் கீழேயே சினோபெக் தற்போது சந்தைக்குள் நுழைந்துள்ளது. எனினும் அடுத்த ஓராண்டு காலத்திற்குள் அது நாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய எரிபொருள் அளவினால் பெரும் பொருளாதார மாற்றங்களையோ, எரிபொருள் சந்தையில் தளம்பலற்ற நிரந்தர மாற்றத்தையோ ஏற்படுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்த முடியாது என்கிறார்கள் வல்லுநர்கள். அரசின் அந்நியச் செலாவணிச் சுமையை சிறிதளவு தாங்க சினோபெக் உதவ முடியுமே தவிர, இதனால் பொருளாதார அசாத்தியங்களை உருவாக்கிவிட முடியாது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

மொத்தத்தில் சினோ பெக்கின் வருகையால் சந்தை பெறப்போகும் வாய்ப்பான மாற்றங்களைவிட அதனால் அரசியல் மோதல்கள் அதிகமானவையாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

# வெளிப்படைத் தன்மையுடன் அரசாங்கம் செயற்பட்டால் ஒத்துழைப்பு வழங்கத்தயார்!

## சம்பிக்க பகிரங்கம்



பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண சகல எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என குறிப்பிடும் அரசாங்கம் முதலில் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும். மக்களால் புறக்கணிக்கப்படும் ராஜபக்சர்களை ஒன்றிணைத்துக்கொண்டு முன்னேற்றமடைய முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பத்தரமுல்ல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

ராஜபக்சர்களின் குறிப்பாக முன்னாள் நிதியமைச்சர் பஷில் ராஜபக்சவின் தவறான பொருளாதார முகாமைத்துவக் கொள்கையால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது. 75 வருடகாலமாக நாட்டை ஆட்சி செய்த அரச தலைவர்கள் பொருளாதாரப் பாதிப்புக்கு பொறுப்புக்கூற வேண்டும் எனக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

75 வருடகால ஆட்சியாளர்கள் எவரும் நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளவில்லை.

மஹிந்த ராஜபக்சவின் பத்து ஆண்டு கால ஆட்சியில் பயனற்ற அபிவிருத்திகள் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டன.

ராஜபக்சர்கள் தமது பெயரைப் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக கடன் பெற்று அபிவிருத்திகளை முன்னெடுத்தார்கள். இறுதியில் நாடு பாரிய கடன் சுமைகளை மாத்திரம் எதிர்கொண்டது.

2019 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்த ராஜபக்சர்கள் குறுகிய காலத்துக்குள் நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளி ஒட்டுமொத்த மக்களையும் கடனாளியாக்கியுள்ளார்கள். பொருளாதாரப் பாதிப்பு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து சமூகக் கட்டமைப்பில் நிலவிய பிரச்சினைகளுக்கு சற்று தீர்வு காணப்பட்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண சகல எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரசாங்கம் குறிப்பிடுகிறது.

எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற முன்னர் அரசாங்கம் முதலில் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு தொடர்பான பல விடயங்கள் நாடாளுமன்றத்துக்கு முழுமையாகச் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகவே, அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட்டால் ஒத்துழைப்பு வழங்கத் தயார். – என்றார். (05)

# எனது சாதனைகளை இளம் அமைச்சர் ஜீவன் தொண்டமான் முறியடித்துள்ளார்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டு



தனது சாதனையை இளம் அமைச்சர் ஜீவன் தொண்டமான் முறியடித்துள்ளார் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இளம் அமைச்சராகத் தான் சில பணிகளை நிறைவு செய்தாரெனவும், இந்தச் சாதனையை தற்போது தன்னைவிட இளம் வயதில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் முறியடித்து, இளம் அமைச்சருக்கான சாதனையை தன்வசப்படுத்தியுள்ளார் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். அத்துடன், இளம் தலைமுறையினர் இவ்வாறான சாதனையை செய்ய முன்வர வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சுமார் 169,000 மக்களின் சுத்தமான குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் கேகாலை, அரநாயக்க நீர் விநியோகத் திட்டம் ஜனாதிபதியால் மக்களிடம் கையளிக்கப்பட்ட நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

2018 இல், பிரதமராக இருந்தபோது, இந்த குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்ட வந்தேன். இன்று ஜனாதிபதி என்ற ரீதியில் அந்த நீர்த் திட்டத்தை திறந்துவைக்க வருவதை பெரும் பாக்கியமாக கருதுகின்றேன்.

இந்த திட்டத்தை நிறைவு செய்ய முடிந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

கபீர் ஹசீம் அமைச்சரால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டம் அடுத்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டது.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பதவிக்காலத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. நான் செய்த ஒரு சாதனையை அமைச்சர் ஜீவன் தொண்டமான் முறியடித்துள்ளார். இந்த நாட்டிலேயே இளம் அமைச்சர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். அதற்கு முன்னர் நான்தான் அந்த சாதனைக்கு உரிமையாளனாக இருந்தேன்.

தற்போது அந்த சாதனையை ஜீவன் தொண்டமான் செய்துள்ளார். இளம் தலைமுறையினர் இவ்வாறு முன்வர வேண்டும். – என்று குறிப்பிட்டார்.

# கல்முனையில் தொழுநோய் பரிசோதனைகள் சிகிச்சைகளையும் விரிவுபடுத்த நடவடிக்கை









கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சீ.எம். பசாலால் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் தொழுநோயை கண்டறிவதற்கும் சிகிச்சைகளை விரைவுப்படுத்துவதற்குமான கலந்துரையாடல் தேசிய தொழுநோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பிரசாத் ரணவீரரின் பங்குபற்றுதலுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பி.ஏ.வாஜித், பிராந்திய தொற்றுநோய் தடுப்பியலாளர் வைத்தியர் எம்.ஏ.சி.எம். பசால் உள்ளிட்ட பிரிவு தலைவர்களும், கிராம உத்தியோகத்தர்களும், சுகாதாரத்துறை ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது கல்முனை பிராந்தியத்தில் தொழுநோயைக் கண்டறிவதற்கான பொறிமுறைகளை இலகுபடுத்துவதற்கும் துரிதப்படுத்துவதற்கும் அதற்கான சிகிச்சைகளை மக்கள் அச்சமின்றி பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறை பற்றி மக்களை தெளிவுபடுத்துவதற்குமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் பங்கு பற்றிய தேசிய தொழுநோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் தனது உரையின் போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொழுநோய் கண்டறிதலுக்கான செயற்பாடுகள் மற்றும் அதனைக் கட்டுப்படுத்தி சிறப்பாக முகாமை செய்வது தொடர்பிலும் தமது திருப்தியை வெளியிட்டார்.